# செம்பாக்கம் நகராட்சியில் 28.2.2019ம் நாள் வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற சாதாரணக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. மு.ரா. வசந்தி**
**தனி அலுவலர் / ஆணையாளர்,**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் பிப்ரவரி 2019 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.442** **பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் சட்ட விதிகள் – 2019 னை, அரசானை நிலை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA1) நாள்: 4.2.2019-ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழில், அரசிதழ் எண்.43, நாள் 4.2.2019ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019னை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.443** **பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.3**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் சட்ட விதிகள் – 2019-ன் விதி 14 –ல் திட்ட அனுமதி அல்லது கட்டிட அனுமதி 5 ஆண்டுகள் மற்றும் ஒரு முறை கால நீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே முதலில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரிய விண்ணப்பதாரர்களுக்கு கட்டிட அனுமதி கட்டணம் மற்றும் திட்ட அனுமதி கட்டணம் ஆகியவற்றினை ஏற்கனவே இந்நகர் மன்ற தீர்மானம் எண்.366 நாள் 28.9.2018ல் திருத்தி நிர்ணயம் செய்யப்பட்டு, மூன்றாண்டுகளுக்கு அனுமதி வழங்குவது என மாவட்ட அரசிதழ் எண்.2 நாள் 1.2.2019ல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, மூன்றாண்டுகளுக்கு அனுமதி என்பதனை தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் சட்ட விதிகள் – 2019-ன் விதி 14 –ல் தெரிவித்துள்ளபடி ஐந்தாண்டுகளுக்கு என திருத்தம் செய்யலாம். மேலும் ஒரு முறை கால நீட்டிப்பு 3 ஆண்டுகள் வழங்க விண்ணப்பிக்கும் நபர்களுக்கு நடப்பில் திருத்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டண விகிதங்களின் படி வசூலிக்க மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் சட்ட விதிகள் – 2019-ன் விதி 14 –ல் திட்ட அனுமதி அல்லது கட்டிட அனுமதி மூன்றாண்டுகளுக்கு

பதிலாக ஐந்தாண்டுகள் வழங்கவும், மற்றும் ஒரு முறை கால நீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம். மேலும், கால நீட்டிப்பு கோரும் மணுக்களுக்கு திருத்திய கட்டண விகிதங்களின் அடிப்படையில் வசூலிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.444** **அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் சட்ட விதிகள் – 2019 விதி 23ன் படி திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பங்களின் மீது கீழ்காணும் உரிமம் பெற்ற கட்டக் கலைஞர் (Architect), பொறியாளர் (Registered Engineer), கட்டமைப்பு பொறியாளர் (Registered Structural Engineer), கட்டுமான பொறியாளர் (Registered Construction Engineer), தர தணிக்கையாளர் (Registered Quality Auditor), புவியியல் பொறியாளர் (Registered Geo Technical Engineer), நகரமைப்பாளர் (Registered Town Planner), இயற்கை கட்டிட கலைஞர் (Registered Landscape Architect), மேம்பாட்டாளர் (Registered Developer) ஆகியோரால் சான்று வழங்கிட வேண்டியுள்ளதால், அவர்களுக்கு உரிமம் வழங்க கீழ்காணும் உரிமத் தொகை நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | உரிமத் தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | கட்டக் கலைஞர் (Architect) | 5000 |
| 2 | பொறியாளர் (Registered Engineer) | 5000 |
| 3 | கட்டமைப்பு பொறியாளர் (Registered Structural Engineer) | 5000 |
| 4 | கட்டுமான பொறியாளர் (Registered Construction Engineer) | 5000 |
| 5 | தர தணிக்கையாளர் (Registered Quality Auditor) | 5000 |
| 6 | புவியியல் பொறியாளர் (Registered Geo Technical Engineer) | 5000 |
| 7 | நகரமைப்பாளர் (Registered Town Planner) | 5000 |
| 8 | இயற்கை கட்டிட கலைஞர் (Registered Landscape Architect) | 5000 |
| 9 | மேம்பாட்டாளர் (Registered Developer) | 5000 |

**அலுவலக குறிப்பு:** ஐந்தாண்டுகளுக்கு உரிமம் வழங்க நிர்ணயம் செய்யப்பட்டுள்ள உரிமத் தொகையினை வசூலிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.445 அலுவலக குறிப்பு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.5**

செம்பாக்கம் நகராட்சியின் 2018-19ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு அறிக்கை மற்றும் 2019–20ம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** வரவு செலவு திட்ட அறிக்கைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.446 ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சியில் 2018–19 ம் ஆண்டின் பொது நிதியின் கீழ் 21.2.2019 ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 பாக்கியம் நகர் பூங்காவிற்கு சுற்று சுவர், நடைபாதை அமைத்தல் மற்றும் சிறுவர் விளையாட்டு சாதனங்கள் சப்ளை செய்து பொருத்தும் பணி | 8.20 | எல். கிஷோர்குமார் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | எல். சதீஷ்குமார் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 2 | வார்டு எண்.7 வி.ஜி.பி ஸ்ரீனிவாசா நகர் வடக்கு பூங்காவிற்கு சுற்று சுவர் அமைத்தல் பணி | 9.90 | எல். கிஷோர்குமார் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | எல். சதீஷ்குமார் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 3 | வேளச்சேரி சாலை - மகாலட்சுமி நகர் முதல் கௌரிவாக்கம் வரை சாலையின் நடுவே அமைந்துள்ள தெருவிளக்குகளின் பழுதடைந்துள்ள கேபிள்களை புதியாக மாற்றுதல் மற்றும் அம்மா உணவகத்திற்கு அலுவலக ஜெனரேட்டரிலிருந்து புதியதாக கேபிள் பதிக்கம் பணி | 8.20 | சிம்லா கூல் மேக்கர்ஸ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 4 | தெருவிளக்கு பராமரிப்பிற்காக தானியங்கி டைமர் சுவிட்கள் (Automatic Timer Switches) சப்ளை செய்து பொருத்தும் பணி | 8.20 | சிம்லா கூல் மேக்கர்ஸ் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | வார்டு எண்.7 ராஜராஜேஸ்வரி நகர் வலது புறம், ராதே ஷியாம் அவென்யு சாமி தெரு, டெல்லஸ் அவென்யு மெயின் சாலை (சத்ய சாய் நகர் முதல்) ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | 9.80 | ஜெ. தெய்வகனி | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 6 | நகராட்சி போலிரோ வாகனம் TN-11 AK 6142–க்கு கூடுதல் பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் இதர உபகரணங்கள் சப்ளை செய்து பொருத்தும் பணி | 0.55 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | ஜெ. தெய்வகனி | மதிப்பீட்டை விட 0.90% அதிகம் |
| 7 | வார்டு எண்.1 பவநந்தியார் தெரு, களத்துமேடு தெரு, வார்டு எண்.3, லட்சுமி காந்தம் தெரு, வேளச்சேரி சாலை, வார்டு எண்.5 டெல்லஸ் அவென்யு, பழுதடைந்த பகிர்மான குழாயினை புதியதாக மாற்றி அமைத்தல் பணி | 3.00 | எஸ்விபி. எலக்ட்ரிகல்ஸ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | ராஜலட்சுமி கான்ட்ராக்டர்ஸ் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.447 ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சியில் 2019–20ம் நிதியாண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக 28.2.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி விவரம் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 7 வரை உள்ள சாலைகளில் குடிநீர் பைப்லைன் உடைப்பு மற்றும் கைபம்பு பழுது நீக்கம் செய்தல் பணி | 980000 | எஸ்விபி எலக்ட்ரிகல்ஸ் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | ராஜலட்சுமி கான்ட்ராக்டர்ஸ் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 2 | வார்டு எண்.8 முதல் 15 வரை உள்ள சாலைகளில் குடிநீர் பைப்லைன் உடைப்பு | 980000 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் கைபம்பு பழுது நீக்கம் செய்தல் பணி | | வி. கோதண்டராமன் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |
| 3 | செம்பாக்கம் நகராட்சியின் குடிநீர் விநியோக பராமரிப்பின் கீழ் உள்ள 12 எண்ணம் மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகளை நீரேற்றம் மற்றும் விநியோகம் செய்தல் பராமரிப்பு பணிக்கு தேவையான பணியாட்கள் சப்ளை செய்தல் | 980000 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | வி. கோதண்டராமன் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |
| 4 | செம்பாக்கம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 12 எண்ணம் பூங்காக்களை பராமரிக்கும் பணிக்கு தேவையான பணியாட்கள் சப்ளை செய்தல் | 980000 | ஷைன் எண்டர்பிரைசஸ் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | எம். மாதவன் | மதிப்பீட்டை விட 1.40% அதிகம் |
| 5 | செம்பாக்கம் நகராட்சியின் அலுவலக பராமரிப்பில் உள்ள கணினி, பிரிண்டர்கள் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 200000 | ஆரஞ்ச் சிஸ்டம்ஸ் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | கிரிஸ் கம்ப்யூட்டர்ஸ் | மதிப்பீட்டை விட 1.30% அதிகம் |
| 6 | வார்டு எண்.1 முதல் 7 வரையான வார்டு பகுதிகளில் உள்ள பொது குழாய்கள் பராமரிப்பு பணி | 500000 | எஸ்விபி எலக்ட்ரிகல்ஸ் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | ராஜலட்சுமி கான்ட்ராக்டர்ஸ் | மதிப்பீட்டை விட 1.50% அதிகம் |
| 7 | வார்டு எண்.8 முதல் 15 வரையான வார்டு பகுதிகளில் உள்ள பொது குழாய்கள் பராமரிப்பு பணி | 500000 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | வி. கோதண்டராமன் | மதிப்பீட்டை விட 1.50% அதிகம் |
| 8 | அலுவலக பராமரிப்பில் உள்ள 125 கேவிஎ ஜெனரேட்டர்கள் 2 எண்ணிக்கை மற்றும் எம்எப் பேனல் போர்டு 2 எண்ணம் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 400000 | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | |
| 9 | நகராட்சி பகுதிகளில் 14 இடங்களில் மற்றும் அம்மா உணவகத்தில் உள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோக செய்யும் இயந்திரங்கள் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 900000 | போர்டிஸ் கார்பரேஷன் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | என். சாஸ்தாமணி | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 10 | நகராட்சி பகுதியில் 130 இடங்களில் உள்ள சிறுமின்விசை மோட்டர்கள் ஆண்டு பராமரிப்பு செய்தல் பணி | 980000 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | வி. கோதண்டராமன் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | செம்பாக்கம் நகராட்சியின் அலுவலக பராமரிப்பில் உள்ள 10 கேவிஏ ஆன்லைன் யுபிஎஸ். சர்வீஸ் செய்தல் மற்றும் 16 எண்ணிக்கை மின் கலன்கள் சப்ளை செய்து பொருத்துதல் | 200000 | ஒப்பந்தப்புள்ளி வரப்பெறவில்லை | |
| 12 | 16 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் குடிநீர் விநியோகம் செய்ய பணியாட்கள் சப்ளை செய்தல் பணி | 700000 | போர்டிஸ் கார்பரேஷன் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | என். சாஸ்தாமணி | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 13 | அலுவலக பராமரிப்பில் உள்ள நகலெடுக்கும் இயந்திரம் மற்றும் வண்ண நகலெடுக்கும் இயந்திரம் ஆண்டு பராமரிப்பு பணி மற்றும் தேவையான டோனர்கள் கொள்முதல் செய்தல் | 250000 | யூனிகாம் இன்போடெல் பி லிட் | மதிப்பீட்டை விட 0.20% குறைவு |
| | | | ஸ்ரீவாரி கம்யூட்டர்ஸ் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |
| 14 | பசுமை உரக்குடில்களில் அமைக்கப்பட்டுள்ள பெரிய அறவை இயந்திரம் (Shredding Machine) ஒன்று மற்றும் சிறிய அறவை இயந்திரங்கள் இரண்டு ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 200000 | எல். கிஷோர்குமர் | மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | | | எல். சதீஷ்குமார் | மதிப்பீட்டை விட 1.20% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்ற அனுமதி வழங்கலாம்.
2. வரிசை எண்.8 மற்றும் 11-க்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறாததால், மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.448 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

செம்பாக்கம் நகராட்சியில் 2019–20ம் நிதியாண்டிற்கு ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக 28.2.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக பயன்பாட்டுக்கு தேவையான படிவங்கள் பதிவேடுகள் அச்சடித்து வழங்குதல் | 5.00 | சென்னை எழுது பொருள் மற்றும் தொழிற் கூட்டுறவு சங்கம் | அதிகம் |
| | | | எம்.எம்.எம் எண்டர்பிரைசஸ் | குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வடக்கன்குளம் பல்பொருள் தொழிற் கூட்டுறவு சங்கம் | அதிகம் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு: பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.449 ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

செம்பாக்கம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கைகள் முறையே மாநில அளவில் மற்றும் மாவட்ட அளவில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் வழியாக மார்க் மீடியா கம்யூனிகேஷன்ஸ், சென்னை-6 என்கிற விளம்பர நிறுவனம் மூலம் நாளிதழ்களில் விளம்பரங்கள் பிரசுரம் செய்யப்பட்டதற்கு கீழ்கண்ட விவரப்படி பில் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **பணி விவரம்** | **பிரசுரம் வகைபாடு** | **பட்டியல் எண் மற்றும் நாள்** | **பட்டியல் தொகை (ரூ.)** |
|---|---|---|---|---|
| 1 | பூங்கா மேம்பாடு பணிகள் | மாவட்ட அளவில் | எண்.113 நாள் 9.1.2019 | 18900 |
| 2 | குடிநீர் வீட்டு குழாய் இணைப்புகள் வழங்கும் பணி | மாநில அளவில் | எண்.177 நாள் 24.1.2019 | 72188 |
| 3 | திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ஒப்பந்த பணியாளர்கள் சப்ளை செய்தல் பணி | மாநில அளவில் | எண்.207 நாள் 30.1.2019 | 74550 |
| 4 | தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி – திருமலை நகர் பூங்கா பணி | மாவட்ட அளவில் | எண்.228 நாள் 6.2.2019 | 26460 |
| 5 | குடிநீர் வரைவு துணை விதிகள் | மாவட்ட அளவில் | எண்.255 நாள் 13.2.2019 | 56332 |
| | | | | 248430 |

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட விளம்பர கட்டண தொகையினை, விளம்பர நிறுவனத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மானம் எண்.450 ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு சார்பாக பழைய நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் சேப்பாக்கம், சென்னை 5ல் உள்ள அலுவலக கோப்புகள் இதர தளவாடங்களை புதிய நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், பட்டிணப்பாக்கம், சென்னைக்கு 16.2.2019ற்குள் மாற்றிட ஏதுவாக செம்பாக்கம் நகராட்சி 'P' Section, SBM Section மற்றும் World Bank Section ஆகிய 3 பிரிவுகளில் உள்ள கோப்புகளை உரிய முறையில் நகராட்சி பணியாளர்களை அழைத்து சென்று போரா கோணிக்கள் மற்றும் சாக்கு கோ.களில் வைத்து சசல் கொண்டு நன்கு தைத்து லாரிகளில் ஏற்றும் விதமாக முன்தேதியிட்டே 10 பணியாளர்களை தினமும் அனுப்பிடவும், கோணியில் அடைக்கப்பட்ட கோப்புகளை 6வது மாடியில் இருந்து இறக்கி நகராட்சி லாரிகள் / வாடகை லாரிகள் மூலம் ஏற்றிக்கொண்டு புதிய அலுவலக கட்டிடத்தின் 11வது தளத்தில் கொண்டு சேர்த்து Arrange பண்ணி கொடுக்கும் விதமாக நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்கள் 31.1.2019ல் உத்திரவு பிறப்பித்துள்ளார்.

அதன் படி இந்நகராட்சி மூலம் TATA Ace லாரிகள் ஏற்படத்தி 10 பணியாளர்களை 8.2.2019 முதல் அழைத்து சென்று உரிய போரா கோணிக்கள் 1000 எண்ணிக்கையும் சணல் கட்டுகள் 6 பண்டில்கள் குத்துாசிகள் 20 எண்ணிக்கை ஏற்படுத்தி தினமும் பணியாளர்களுக்கு தேவையான போக்குவரத்து மற்றும் மதிய உணவு உட்பட ரூ.80,000/- (என்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.451 ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.279/செ.ம.தொ.அ/2018 நாள் 10.8.2018ல் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பெருநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பஞ்சாயத்து அமைப்புகள் விளம்பரத்திற்கென்று அரசு ஒதுக்கீடு செய்துள்ள நிதியிருப்பின் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை நிர்ணயித்துள்ள கட்டணத்தின் படி தினமணி மலர் நாளிதழ் வெளியிடும் தொழில் மலர் 2018ல் தாங்கள் துறையின் சார்பில் விளம்பரம் செய்யுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க, இந்நகராட்சியின் 2018ம் ஆண்டு சாதனைகளை தொழில் மலரில் வெளியிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. விளம்பர செலவினம் ரூ.30000/-ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மானம் எண்.452 ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

செம்பாக்கம் நகராட்சிக்கு சொந்தமான இன்னோவா வாகனம் எண். TN 11 D 2013 சர்வீஸ் செய்யும் பொருட்டு தயாரிப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட லான்சன் மோட்டார்ஸ் பிரைவேட் லிட், பள்ளிக்கரணை நிறுவனத்திடம் வாகனத்தை ஒப்படைத்து பணி முடிக்கவும் அதற்கான தோரய மதிப்பீட்டு தொகை ரூ.70,000/–க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.453 ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

செம்பாக்கம் நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் பயன்பாட்டில் உள்ள வாகனங்களில் Supply and Installation GPS Sim Tracking of Vehicles with Tracking Device for Public Health Vehicle பணிகளை மேற்கொள்ள 21.1.2019ம் தேதியில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கும், அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Softbery Solutions, S-70, 120 feet road, Soodamanipuram, Karaikudi-630003 என்கிற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | ஒப்பந்தப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | |
|---|---|---|---|
| | | Softbery Solutions S-70, 120 feet road, Soodamanipuram Karaikudi-630003 | Realtech System 9, Vengamedu, Perundurai Erode-638052 |
| 1 | Supply and Installation GPS Sim Tracking of Vehicles with Tracking Device for Public Health Vehicle | ரூ.61943/- Monthy Basis (Inclusive of Tax) | ரூ.68676/- Monthy Basis (Inclusive of Tax) |
| | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | குறைவு | அதிகம் |

அலுவலக குறிப்பு: குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Softbery Solutions, S-70, 120 feet road, Soodamanipuram, Karaikudi-630003 நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு அங்கீகாரம் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.454 பின்னேற்பு அங்கீகாரம் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

செம்பாக்கம் நகராட்சியில் 2019–20ம் நிதியாண்டிற்கு ஆண்டு பொது சுகாதாரப்பிரிவின் கீழ் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக 27.2.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பொது சுகாதார பொருட்கள் மற்றும் தளவாடங்கள் (ஆண்டிற்கு) | 6.00 | ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் | குறைவு |
| | | | தி சென்னை தலைமை செயலக பணியாளர் கூட்டுறவு சங்கம் | அதிகம் |
| 2 | நகராட்சி பகுதியில் அமைந்துள்ள கட்டிடங்களிலிருந்து கழிவு நீர் அகற்றும் ஊர்தி மூலம் கழிவு நீர் அகற்றுதல் உரிமம். | -- | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறல்லை | |
| 3 | பொது சுகாதார முதல் நிலை சேகரிப்பு வாகனங்கள் பழுது பார்த்தல் பணி | 2.00 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறல்லை | |
| 4 | பொது சுகாதார இரண்டாம் நிலை சேகரிப்பு வாகனங்கள் பழுது பார்த்தல் பணி | 9.00 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறல்லை | |
| 5 | பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் புகையடிக்கும் இயந்திரங்கள் பழுது பார்த்தல் பணி | 2.00 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறல்லை | |
| 6 | பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கான டயர்களை ரிடிரேடிங் செய்தல் பணி | 1.50 | யூனிவர்சல் டயர் ரிடிரெட்டிங் | குறைவு |
| | | | யுடி ஆர்சி டிரெட்ஸ் | அதிகம் |
| 7 | பிளிச்சிங் பவுடர் கூட்டுறவு அங்காடி மூலம் வாங்குதல் பணி | 2.00 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறல்லை | |
| 8 | சுண்ணாம்புத்துாள் (நீர்த்த சுண்ணம் ஆண்டிற்கு) | 2.00 | ஆர்.எஸ்ஆர். எண்டர்பிரைசஸ் | குறைவு |
| | | | தாம்பரம் கடப்பேரி ஆதிதிராவிடர் தொ.ல் ஒப்பந்த | அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கூட்டுறவு சங்கம் | |
| 9 | டெங்கு, சிக்குன்குனியா, மலேரியா போன்ற கொசுக்கள் மூலம் பரவும் வியாதிகளை தடுக்க கொசு லார்வா ஒழிப்பு மற்றும் ஈ ஒழிப்பு மருந்துகள் வாங்கி பயன்படுத்துதல் பணி | 5.00 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறல்லை | |
| 10 | MCC, OCC டியோடிசைன்,ரெடிமிக்ஸ் மற்றும் லெமன் கிராஸ் மருந்துகள் வாங்கிட | 6.00 | ஸ்ரீ பாலாஜி மார்கெட்டிங் | குறைவு |
| | | | ஸ்ரீ வினாயகா பார்மா | அதிகம் |
| 11 | திடக்கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் கழிவுகள், வீட்டு அபாயகரக் கழிவுகள், மின்சார கழிவுகள், மருத்துவ கழிவுகள் மற்றும் கட்டிட கழிவுகள் 6 வகையான கழிவுகள் மேலாண்மை விளம்பரம், மற்றும் பொது சுகாதாரப்பிரிவு பூச்சிகளால் உருவாகும் நோய்கள் குறித்த மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு பேனர்கள், பிளாக்கார்டுகள், துண்டு பிரசுரங்கள், நோட்டீஸ்கள் அச்சடிக்க நாடகங்கள் ஒலி மற்றும் ஒளி விளம்பரங்கள் | 6.00 | ஸ்ரீ கிருஷ்ணா பிரிண்டர்ஸ் | குறைவு |
| | | | கனிஷ்கா பிரிண்டர்ஸ் | அதிகம் |
| 12 | நகராட்சியில் உள்ள பொது சுகாதார பிரிவு வாகனங்கள் 6 TATA ACE, 1 JCB, 3 காம்பாக்டர்கள், 1 லாரி உட்பட 10 வாகனங்களுக்கும் ஆண்டு பராரிப்பு, தகுதிச்சான்று பெற பழுது பணிகள், அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள், ஆயில்கள் மாற்றம் போன்றவை, ஆயுள் காப்பீடு, சாலை வரி, பசுமை வரி இதர வரியினங்களுக்கு | 15.00 | எம்.கே.எஸ் மோடார்ஸ் | குறைவு |
| | | | கே.எஸ்.ஆர். மோட்டார்ஸ் | அதிகம் |
| 13 | முதல்நிலை குப்பைகள் பிரித்து வாங்கும் வாகனங்கள் எந்த நிலையில் நிற்காமல் தினசரி பயன்பாட்டில் இருக்கும் வகையில் பராமரிப்பு மேற்கொள்ள ஆண்டு பராமரிப்பு 6 TATA ACE, 13 BOV மற்றும் 25 மூன்று சக்கர சைக்கிள்கள் | 10.00 | ஸ்ரீ சாய் இன்டஸ்ரி | குறைவு |
| | | | லட்சுமி எண்டர்பிரைசஸ் | அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | தெருநாய்கள் பிடித்து புளூ கிராஸ் மூலம் கருத்தடை, ARV வெறிநோய் தடுப்பு மருந்துகள் வழங்கிட ஆண்டிற்கு | 2.00 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறல்லை | |
| 15 | கால்நடைகளால் ஏற்படும் இடையூறு மற்றும் விபத்துக்களை தடுக்கும் விதமாக மக்களிடையே விளம்பரபடுத்தி மாடுகளை பிடித்து நகராட்சி கொட்டத்தல் அடைத்து பராமரிப்பு மேற்கொள்ள | 2.00 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறல்லை | |
| 16 | நகராட்சியின் மூலம் வாரம் இரண்டு நாட்கள் அகற்றப்படும் பிளாஸ்டிக் மற்றும் எரியூட்டக்கூடிய கழிவுகளை வாடகை லாரி மூலம் ஏற்றி அனுப்புவதற்கும், அதற்கு தேவையான போராக்களை விநியோகம் செய்வதற்கும் ஆன பணி | 5.00 | ராமதாஸ் கண்ணன் | குறைவு |
| | | | சிம்லா கூல் மேக்கர்ஸ் | அதிகம் |
| 17 | MCC/OCC இரண்டு 5.00 டன் கொள்ளளவு கொண்ட பசுமை நுன்னுயிர் உரக்கூடம், 6 சிறிய உரக்கூடங்குகளுக்கு தேவையான உயிகலவைகள் தயாரிக்க தேவைப்படும் வெல்லம், தயிர், தவிடு, உமி மற்றும் மரத்துாள்கள் வாங்கி உரம் தயாரிக்க மற்றும் உரக்கூடங்களில் ஏற்படும் பராமரிப்பு இதர செலவினங்களை மேற்கொள்ளுதல் பணி மற்றும் உலர் கழிவு சேகரிப்பு மையத்திற்கு தேவையான பேலிங் பொருட்கள் வாங்கி வழங்குதல் உட்பட | 5.00 | லோகநாதன் | குறைவு |
| | | | சதீஷ்குமார் | அதிகம் |
| 18 | Walky Talky ஆணையர், அலுவலர்கள் மற்றும் ஓட்டுநர்கள் / மேற்பார்வையாளர்கள் / வாகனங்களில் பொறுத்தி பணிகளை துரிதப்படுத்திட ஆண்டு வாடகை மற்றும் பராமரிப்பு | 2.00 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறல்லை | |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கவும், ஒப்பந்தப்புள்ளி பெறப்படாத இனங்களுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்.455 அலுவக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

செம்பாக்கம் நகராட்சியில் 2017–18 ம் ஆண்டின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்ட நிதியின் கீழ் 22.2.2019 ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | Construction of Gym Building Compound Wall, Footpath, Children Play Materials and Supply of Gym Materials at Ward No.1, Thirumalai Nagar Phase 1, Providing Park Development at Thirumalai Nagar Park in Sembakkam Municipality | 38.25 | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 0.07% குறைவு |
| | | | வி. கோதண்டராமன் | மதிப்பீட்டை விட 1.05% அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 456 அலுவக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**ஒப்பம்/------**
**திருமதி. மு. ரா. வசந்தி**
**தனி அலுவலர்**
**செம்பாக்கம் நகராட்சி**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**